நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மக்களின்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (06-11-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 344

# பத்தமேனிக்கு முன்னேற எடுத்த படையினரின் முயற்சி முறியடிப்பு

## தொடர்ச்சியான ஷெல் வீச்சினால் மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

அச்சுவேலி, நவ. 6

வலிகாமம் கிழக்கு பத்தமேனிப் பக்கமாக நேற்றுக்காலை ஸ்ரீலங்காப் படையினர் பெருத்த எடுப்பில் முன்னேற முயன்ற வேளை, விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை நடத்தினர்.

போராளிகளின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில், படையினர் பலத்த இழப்புகளுடன் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்றுக்காலை பலாலி முகாம் மற்றும் இராணுவ காவல் முகாம்களில் இருந்து அச்சுவேலி, வளலாய், ஓட்ட கப்புலம், பத்தமேனி, தென் மூலை, கதிரிப்பாய் மற்றும் தொண்டைமானாறு போன்ற குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதேசமயம் சரமாரியான வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

திடீரென தாக்குதல்கள் ஆரம்பமான தால் பீதியடைந்த மக்கள் கையில் கிடைத்ததை வாரியெடுத்துக் கொண்டு, பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர்.

காலை 7 மணியளவில் படையினர் மிக மோசமான முறையில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று நடந்த தாக்குதல்களினால் பொதுமக்களின் வீடுகள் உடைமைகள் சேதமடைந்தன.

நேற்றைய சம்பவங்களின் போது பொதுமக்கள் சிலர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், நவ. 6

வலிகாமம் கிழக்கில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது இரு வீரவேங்கைகள் களப்பலியானார்கள்.

வீரவேங்கை குகன் அல்லது ஹில்மன் (சிதம்பரநாதன் இந்திரகுமார் — தன்னாலை). வீரவேங்கை உமைநாதன் (முருகேசபிள்ளை சிவகுமார் —புதுக்குடியிருப்பு) ஆகியோரே களப்பலியானவர்கள் ஆவர். (ஒ)

## கதிரிப்பாயில் ஷெல் விழுந்து வயோதிபர் பலி

யாழ்ப்பாணம், நவ. 6

வளலாய்ப்பகுதியில் இருந்து நேற்றுக்காலை ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி, கதிரிப்பாயில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

60 வயது மதிக்கக்கூடிய இவரது சடலம் இனங்காணப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (ஒ-15)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் தொடர்ந்து தமிழீழ மீட்பு நிதியைச் சேகரித்து வருகின்றனர்.

அந்த வரிசையில் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் உ. அ. பிரிவு மக்களிடமிருந்து காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும்—

நல்லூர், நீவகம், காரைநகர் உ. அ. அ. பிரிவுகளைச் சேர்ந்த மக்களிடம் இருந்து முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பட்ஜெட்

ஐ. தே. க. அரசின் ஐந்தாவது வரவு செலவுத் திட்டத்தை பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்க இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் 6 ஆயிரத்து 600 கோடி ரூபாவை ஈடுசெய்யும் வரவு செலவுத் திட்ட உரையை இன்று பிற்பகல் 2-30 மணிக்கு பிரதமர் சபையில் ஆரம்பிப்பார். (ஒ-5)

## "குமண"

திருமலை சென்றிருந்த "குமண" கப்பல் நேற்று நண்பகல் பருத்தித்துறையை வந்தடைந்தது.

கப்பலில் எஞ்சியிருந்த பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று நடந்ததாகவும்—

பொருள்களை இறக்கி விட்டு இன்று கப்பல் மீண்டும் கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

மக்களின் இன்னல்கள் தீர

## ஏனைய சமயத் தலைவர்களுடன் இணைந்து செயலாற்றுவேன்

### பதவி ஏற்ற ஆயர் தெரிவிப்பு

குருநகர், நவ. 6

இன்றைய நிலையில் நீதியோடு சேர்ந்த அமைதி கிடைக்க வேண்டும். மக்களின் இன்னல்கள் நீங்கி இந்த மண்ணில் அமைதி தோன்றவேண்டும் என்ற எண்ணத்தை உடைய ஏனைய சமயத் தலைவர்களுடன் இணைந்து செயலாற்ற எனது பணிக்காலத்தில் முயற்சிப்பேன்.

யாழ். புதிய ஆயராக நேற்று பதவி ஏற்றுக்கொண்ட அதி வண கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஆயர் சம்பிரதாய பூர்வமாகப் பதவி ஏற்ற வைபவம் நேற்று மாலை யாழ். பேராலயத்தில் ஓய்வுபெற்ற முன்னாள் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

பதவியை ஏற்றுப் பேசிய அதி வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மேலும் பேசுகையில் "வீடுகளையும் சொத்துக்களையும் தமது சொந்த இடங்களையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் இன்னல்களை களைவதற்கு ஆண்டவர், நம்மோடே என்ற உணர்வுடன் நாம் செயலாற்றுவோம் என்றார்.



மேதகு தோமஸ் சௌந்தரநாயகம்

வரவேற்பு வைபவத்தில் முன்னாள் ஆயர் உட்பட நல்லை ஆதீன முதல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், தென் இந்திய திருச்சபை ஆயர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

மருத்துவ பீடத்தில் நடந்த

## "ராகிங்" எதிரொலியாக மாணவன் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட தேநீர்ச் சாலையில் கடந்த வியாழனன்று இடம் பெற்ற "ராகிங்" சம்பவம் தொடர்பாக மருத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர் ஒருவர், பல்கலைக் கழக நிர்வாகத்தினரால் காலவரையறை குறிப்பிடப்படாமல் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார் என்று அறிய வருகிறது.

அன்றைய தினம் தேநீர்ச் சாலையில் இடம்பெற்றதாகக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர

## படையினருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவாம்

### நாடாளுமன்றில் நேற்று பிரதமர்

கொழும்பு, நவ. 6

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக பாதுகாப்புப் படையினருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க முன் கண்டவாறு, நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவது அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

இந்த நோக்கத்தை அடைவதற்காக பாதுகாப்புப் படையினருக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப்படையினர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காடு தரும் மழையில் நாடு பெறும் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MATHS CENTRE
Nelliady
# A/L 94

★ காலிகள் - a.m. 6.15
★ நுண்கணிதம் a.m. 7.15

திரு. அருளானந்தம்
ஆரம்பம்:- 7 - 11 - 1992 சனிக்கிழமை
[C/3670]


# இன்று

மட்டுவில் ஆ. நடராசாவின் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் இயங்கும் இலவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. (இ)

★ ★ ★

உடுவில், நவ. 6
சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 00 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (த-152)

★ ★ ★

தீவக கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீவக கோட்ட அரசியல் பணிமனையில் நடைபெறும்.
கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ 167)

# ஆலய உற்சவங்கள் சமய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சாமுண்டிதேவி சமேத ஞான வைரவ சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் திங்கட்கிழமை 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
மகா கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. மகா கும்பாபிஷேக பிரதம குருவாக பண்டிதர் வித்துவான், சைவப்புலவர் சிவஸ்ரீ இ. நவரத்தினக் குருக்கள் பணிபுரிவார். (அ)

★ ★ ★

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் நினைவுகளில் நாளை சனிக்கிழமை காலை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை மாலை வரை அகில உலக அகண்ட நாம பஜனை நடைபெறும்.
யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியின் அகண்ட நாம பஜனை சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும். இந்த பஜனையில் யாழ். சமித்தி உறுப்பினர்களும், நல்லூர், முத்திரைச்சந்தை, சுண்டுக்குளி, கல்வியங்காடு, கோப்பாய் மண்டலிகளின் உறுப்பினர்களும், பாலவிகாஸ் உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (அ)

★ ★ ★

உரும்பராய் தேவாலய வீதியில் உள்ள பகவான் சத்ய சாயி சேவா நிலையத்திலும் இரண்டு நாட்களும் அகண்ட நாம பஜனை நடைபெறும். (அ-89)

★ ★ ★

தலங்கிளப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாரி அம்மன் ஆலயத்தில் இன்று வருடாந்தக் குளிர்த்தியும், போதிய மழை வேண்டி விசேட அபிஷேக, பூசைகளும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினரின் வருடாந்த இலவச சமய தீட்சை இன்று மாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஒன்பது வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சமயதீட்சை வழங்கப்படும். (அ-30)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் — இறுதி நிலைப் போட்டிகளின் மூன்று ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறும்.

## சென். ஜோன்ஸில்

யாழ். சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் நாவாந்துறை றோ. க. வி. அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் அணியும், கிளிநொச்சி? மைதானத்தில் ... கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதும்.

## கொக்குவில் இந்துவில்

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் ஆட்டத்தில் சென், சார்ள்ஸ் ம. வி. அணியை எதிர்த்து சென். ஜோசப் ம வி. அணி மோதும். (உ)

# கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், நவ. 6
விளையாட்டு வீரர்கள், மாணவ, மாணவிகள், பயிற்சியாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் ஆகியோருக்கான கூடைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று நாளை முதல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறவிருக்கிறது.
கூடைப்பந்தாட்ட தேசிய பயிற்சியாளரும், மத்தியஸ்தருமான திரு இராம் சுந்தரலிங்கம் இப்பயிற்சி முகாமின் பிரதம பயிற்சியாளராகக் கலந்து கொள்வார்.
காலை 7. 30 மணிமுதல் 9 30 மணி வரை பெண்களுக்கும், பிற்பகல் 3 மணி முதல் 5. 30 மணி வரை ஆண்களுக்குமான பயிற்சிகள் நடைபெறும்.
கூடைப்பந்தாட்டம் விளையாடுவதற்குக் கற்றுக்கொள்ள விரும்புவோரும் இப்பயிற்சி முகாமில் பங்கு பற்றலாம் என்றும் —
பயிற்சியாளர், மத்தியஸ்தர்களுக்கான விசேட வகுப்புகள், பயிற்சி முகாமில் பங்கு பற்றுவதற்கான பதிவுகள் ஆகியன குறித்து திரு. இராம் சுந்தரலிங்கத்துடன்தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மரக்கன்றுகளை நடுவதில் மக்கள் பெரும் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ. 6
மர நடுகை வாரத்தில் மக்கள் பெரும் ஆர்வத்துடன் பல இடங்களிலும் மரக் கன்றுகளை நட்டு வைத்தனர்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கடந்த மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதி வரை மர நடுகை வாரமாக பிரகடனப் படுத்தி இருந்தது தெரிந்ததே.
இந்த நாட்களில் மக்கள் ஆர்வத்துடன் சகல பொது இடங்களிலும், வீதிகளிலும், வீடுகளிலும் பரவலாக மரக்கன்றுகளை நட்டு அவற்றுக்கான பாதுகாப்பு கூடுகள் அமைப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.
எமது மண்ணின் வளத்தை பாதுகாக்கவும் சூழல் மாசடைவதை தடுக்கவும் தமிழீழமெங்கும் மர நடுகை மேலும் பரவலாக்கப்படல் வேண்டும். குறிக்கப்பட்ட இந்த வாரத்தை மட்டும் மர நடுகைக்கான காலமாக கருதாமல் மரக்கன்றுகளை நடுவதற்கு மிக வாய்ப்பாக அமைந்துள்ள இம் மழை காலத்தில் தொடர்ந்தும் மர நடுகையினை மேற்கொள்வது அவசியமானதாகும்.
பொது ஸ்தாபனங்கள், சமூக அமைப்புகள் மக்கள் மத்தியில் சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் அதில் மரங்கள் வகிக்கும் பங்களிப்பினையும் விளக்குதல் வேண்டும். இதன்மூலம் மக்கள் தமது வாழ்விடங்கள் சுற்றுப்புறங்கள் மற்றும் வெளிகளில் மரம் நடுவதற்கான சிந்தனையை தூண்டுவது சிறந்தது.
இவ்வாறு மரம் நடுவதோடு மட்டும் நின்று விடாது மரக்கன்றுகளெல்லாம் தழைத்து வளரத் தக்க வகையில் நீருற்றியும் பாதுகாக்குமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் அனைவரையும் வேண்டிக்கொள்கிறது.


## வெளிவந்துவிட்டது!

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய
### சைவ நெறி
(துரித மீட்டலுக்கான வினா - விடை)
### ஆண்டு - 11

ஆக்கம்: க. சந்திரசேகரம்
வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

(கடந்த வருடம் ஆண்டு 10—11 என வெளிவந்த சைவநெறி, இவ்வாண்டு மாணவர்களின் நன்மை கருதி ஆண்டு 10 சைவநெறி தனியாகவும், ஆண்டு 11 சைவநெறி தனியாகவும் வெளியிடப்பட்டுள்ளது.)
[சி-3667]



தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கம்
சாவகச்சேரி

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் :- யாழ் / டிறிபேக் கல்லூரி மண்டபம்
காலம் :- 07-11-1992 சனிக்கிழமை காலை 10மணி

மேற்படி கூட்டத்திற்கு அங்கத்தவர், அங்கத்தவராகச் சேரவிரும்பும் சகல இளைப்பாற்று வேதனம் பெறுவோர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூ. வெற்றிவேலு — தலைவர்
த. இரத்தினராசா — செயலாளர்
[கி-3671]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 10 — 05 — 1919



மறைவு: 07 — 10 — 1992

### திரு. முருகேசு பொன்னம்பலம்

எமக்கு உயிர் தந்தாய் உதிரம் தந்தாய்
உயர்வான வாழ்வு தந்தாய்
என்றும் உன்னை மறவாதிருக்க உள்ளம்
நிறைந்த பாசம் தந்தாய்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(5554)


## கேள்வி கோரல்
### சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை 19-11 1992ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை இப்பணிமனையில் ரூபா 50ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 20-11-1992ஆம் திகதி மு ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றே திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மலசல கூடம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இவ்வலுவலகத்திலுள்ள பெட்டியிலோ சேர்க்கப்படலாம்.

வைத்திய கலாநிதி.
பொ. இரத்தினசபாபதி,
பிராந்தியப் பணிப்பாளர்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
இல. 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
05-11-1992
(கி-3666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை

# பனாகொடை, தியத்தலாவ படையினர் வடக்கே விரைவு

கொழும்பு, நவ. 6

கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஹமில்டன் வனசிங்க, வடபகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கைகளை நடத்தி படையினரின் மதிப்பை ["இமேஜ்"] உயர்த்த திட்டம் தீட்டியிருக்கிறார் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னேற்பாடாக கடந்த சில தினங்களாக பனாகொடை, தியத்தலாவ, இராணுவ முகாம்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான படையினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர் என்றும்—

படையினரின் உபயோகத்துக்கென நவீன ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் போன்றவையும் ஏராளமாக வடக்கே அனுப்பப்பட்டு வருகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில்—

பேரர் நடவடிக்கை ஒன்றுக்கு இட்டமிட்டே குடாநாட்டில் தொடர்ந்து விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும்—

எந்த வேளையிலும், எப்பகுதியிலும், பெரும் இராணுவ நடவடிக்கை திடீரென ஆரம்பிக்கப்படலாம் என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

(ஒ)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு முல்லைத்தீவு பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக அண்மையில் நியமனம் பெற்றவர்களுக்கு நியமனக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்தில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்று உடனடியாக கடமையைப் பொறுப்பேற்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

[ஓ-162]

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 6

வீட்டு வளவிலோ அல்லது தோட்டத்திலோ நடுவதற்குத் தேவையான நல்லின தென்னங்கன்றுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தேவையானோர் குடாநாட்டில் உள்ள கமநல சேவை நிலையங்களில் அல்லது தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையைச் சேர்ந்த நல்லூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம், இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## உணவு முத்திரைக்கு பொருள் விநியோகம்

மயிலணி, நவ. 6

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மற்றும் இந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களுக்குரிய — மாணவர் உணவு முத்திரைக்கான பொருள்களை, சுன்னாகம் ப. நோ. கூ. ச தனது கிளைகள் மூலம் விநியோகித்து வருகின்றது.

[த-89]

## வீட்டுத் தோட்ட போட்டி

யாழ்ப்பாணம், நவ. 6

மாநகரசபை எல்லைக்குள் வாழும் அனைவருக்குமான வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றை ''யுனிசெப்'' இன் உதவியுடன் யாழ். மாநகர சபை ஏற்பாடு செய்துள்ளது.

(த)

காக்காச்சிவெட்டைச் சம்பவம்:

# கைதானவர்களில் 40 பேர் அம்பாறை ராணுவ முகாமில்

## நாடாளுமன்றில் பிரதமர் தகவல்

கொழும்பு, நவ 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி உதவி அரச அதிபர் பிரிவில் காக்காச்சிவெட்டைக் கிராமத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 40 பேர் அம்பாறையில் உள்ள இராணுவ ஒருங்கிணைப்புத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா கடந்த புதன் அன்று மாலை நாடாளுமன்றத்தில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

[த-எ]

## வயல்களில் சயனைட் ஆணி; கூட்டுப் படை மறுப்பு

கொழும்பு, நவ 6

முஸ்லிம், சிங்கள விவசாயிகளை அவர்களின் இடங்களில் இருந்து விரட்டியடிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள வயல் நிலங்களில் விடுதலைப் புலிகள் சயனைட் பூசப்பட்ட ஆணிகளை போட்டு வருகின்றார்கள் என்ற செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

கூட்டுப் படைகள் தலைமையகம் கடந்த புதனன்று முன்கண்டவாறு தெரிவித்தது

(த-எ)

## இளம் பெண் கொலை; மற்றொரு சிப்பாயும் கைது

கொழும்பு, நவ 6

இளம் பெண் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக இன்னொரு இராணுவச் சிப்பாயை களுத்துறை வடக்குப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயின் நெருங்கிய நண்பர் இவர் என்று சொல்லப்படுகின்றது

இப் பெண்ணின் சடலம் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வஸ்கடுவை கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது.

## பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை இமையாணன் அ. த. க. வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு, பாடசாலை அரங்கில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கலந்துகொள்வார்.

(ஒ)


## வைத்திய சேவை

Dr. க. அம்பிகைபாகன் M. B. B. S. (Ceylon)
தனது வைத்திய சேவையை,
சம்பந்தன் டிஸ்பென்சரியில் நடத்துகிறார்.

இடம்: சம்பந்தன் டிஸ்பென்சரி,
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(இலங்கை வங்கிக்கு அருகில்)

நேரம்; ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை.

[23161]

தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை
பேராலயம்

## பெண்கள் ஐக்கியம்

## தையல் பயிற்சி நிலையம்

தையல் பயிற்சி புதிய வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன. ஆறு மாதப் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை வட்டுக்கோட்டை சபை ஊழியனிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 10-11-1992

விண்ணப்பங்கள் சேர வேண்டிய முகவரி:
செயலாளர்,
பெண்கள் ஐக்கியம்,
தென்னிந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை.

[5549]

## ஆசிரியை தேவை

நவீன முறைப்படி தையல் வேலை கற்றுக் கொடுப்பதற்கு தேர்ச்சி பெற்ற, அனுபவம் மிக்க ஆசிரியை தேவை. தேர்ச்சி பெற்ற சான்றிதழ் அனுபவம் ஆகிய தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10-11-1992

விண்ணப்பம் சேர வேண்டிய முகவரி;
செயலாளர்,
பெண்கள் ஐக்கியம்,
தென்னிந்திய திருச்சபை, வட்டுக்கோட்டை.

[5548]

## A/L 93

துரித மீட்டல்

சனி; ஞாயிறு வகுப்புகள்
காலை 7-30

ஆரம்பம்: 8-11-92

மேலும் விவரங்களுக்கு
நேரில்

"A" Level
Centre

1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3767]

## யா/மகளிர் மகா வித்தியாலயம்

சாவகச்சேரி

### 1993 மாணவர் அனுமதி விவரம்

ஆண்டு 1 — விண்ணப்ப முடிவு திகதி 30-11-1992
ஆண்டு 6 — விண்ணப்ப முடிவு திகதி 18-11-1992
பரீட்சை திகதி: 29 – 11 – 1992
ஞாயிறு காலை 9-00 மணி
பாடங்கள் — தமிழ் - கணிதம்
பரீட்சைக் கட்டணம் ரூபா 15/-

விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- அதிபர்.

(சி/3665)

## St. PATRICK'S COLLEGE
Jaffna.

### பிரவேசப் பரீட்சை - 1993

07 — 11 — 1992

| ஆண்டு | சமூகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8-30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 (இல. 01-100) | 8-00 | 8-30 |
| 1 (இல. 101-206) | 10-00 | 10-30 |

- கல்லூரி அதிபர்.

[23162]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

ஓய்வூதியம் பெறும் தனி ஆளுக்கு யாழ்ப்பாணத்துக்கும் உடுவிலுக்கும் இடைப்பட்ட இடங்களில் சகல வசதியும் உள்ள வீட்டில் ஒருபகுதி (Annex) வாடகைக்குத் தேவை. இறந்தவருடைய வீடு விரும்பத்தக்கது. தொடர்பு: மே/பா 886, உதயன், யாழ்ப்பாணம். (5542)

### மணப்பெண் தேவை

U K எலெக்றோனிக் என்ஜினியர், 31 வயது, 8இல் செவ்வாய், மூலம். பாவம் 21 உடைய மணமகனுக்கு அங்குள்ள அல்லது இங்குள்ள மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23160)

### மணமகன் தேவை?

செவ்வாய்க் குற்றமற்ற, மகம் நட்சத்திரம், 39 வயது, அரசாங்க உத்தியோகத்திலுள்ள அழகிய மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23159)

### மணமக்கள் தேவையா

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம். சந்திப்பு சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23158)

### தவறிவிட்டது

தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் இருந்து கோண்டாவில் இருபாலை றோட் ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் செல்லும் பாதையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைத்தால் சன்மானம் தரப்படும். (5544)

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் 1993 மாதிரிப்பரீட்சை (ஆண்டு 4 மாணவர்களுக்கு) 7-11-92 சனி மு ப. 8, மு.ப. 11 (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட துரித மீட்டல் பயிற்சியையும், மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிறுவனம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (23142)

### தங்குமிடம் வேண்டும்

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்குவதற்கு வசதியான இரு அறைகள் வேண்டும். க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம், (A.B Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3758)

### இலவச திருமண சேவை

37 வயது, பூரட்டம், செவ்வாய் 4, B. Sc ஆசிரியைக்கு ஏற்ற அரச / தனியார்துறை மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். எமது சேவை ஞாயிறு காலையில் உண்டு. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23121)

### இலவச திருமண சேவை

31 வயது, ரோகிணி, பிரான்ஸில் தொழில்புரிபவருக்கு தகுந்த மணப்பெண் தேவை. பெண்ணை அழைப்பதற்கு ஒழுங்குகள் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23122)

### ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப. 3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-3752)

ஆண்டு - 6 அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களையும், துரித மீட்டல் பயிற்சியையும் (15பயிற்சிகளுடன்) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அடுத்த மாதிரி அனுமதிப் பரீட்சை 7-11-92 மு ப. 8, மு. ப. 10 நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (23141)

### துர்க்கா திருமண சேவை

31-08-1992 தொடக்கம் துர்க்கா திருமண சேவை சிவசக்தி ஸ்ரோர்ஸ், இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம் சகலருக்கும் மேற்கூறிய முகவரிக்கு திங்கள், புதன், சனி தொடர்பு கொள்ளவும். (5547)

### WANTED

5¼'' Unused Floppy Discs Required for personal Computer. contact school of Business Administration. 16, 3rd cross street, Jaffna. (C-3761)

### மயூரதி வெளியீடு

கடந்த 4வருட O/L வினாத்தாள்களும், விடைகளும் ரூபா 55/- மேலதிக வினாத்தாள்களும் ரூபா 125/-. பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, மக்மிலன், ஸ்ரீகாந், தனலக்ஷ்மி, கன்னாகம் மற்றும் புத்தகசாலைகளில் கிடைக்கும். (4984)

### மரக்கறி விதைகள்

எம்மிடம் மரக்கறி விதைகள் ஏராளமாக உண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23157)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி சுத்தம் செய்து சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23150)

## கீன்
## கல்வி நிலையம்
திருநெல்வேலி

## O/L Dec. 1992

வினா — விடை
வகுப்புக்கள்

ஆரம்பம்:
**07 - 11 - 1992**
காலை 10 - 30 மணி

விஞ்ஞானம்;
இரா. செல்வவடிவேல்

கணிதம்;
S. வாமதேவன்

★ 1993 கல்வி ஆண்டுக்குரிய புதிய வகுப்புகள்

ஆரம்பம்:
**05 - 12 - 92**

(சி/3661)

## யேர்சி இன பசுமாடுகள் தேவை

ஞானசம்பந்தர் சிறார் பராமரிப்பு நிலையத்திற்கு குறைந்த வயதுடைய பால் கறக்கும் யேர்சி இன பசுமாடுகள் தேவை.

சனி, ஞாயிறு நாட்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

ஞானசம்பந்தர் சிறார் பராமரிப்பு நிலையம்,
மானிப்பாய் வீதி, உடுப்பாய் மேற்கு.
(சி-3664)

## COMPUTER CLASSES

★ BASIC ★ WORD STAR

ஆரம்பம்: 09 November - 1992

★ C. I. M A. Stage - I

★ A. A. T. Inter
(London)

★ I. A. B. Foundation & Inter

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

மேலதிக விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**
14, St Peter's Lane, Hospital Road,
Jaffna. (சி-3766)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 05 — 03 — 1962



அநியாய அழிப்பு: 09 — 11 — 1989

### கதிரித்தம்பி சிவகுமார்
(மின்சார சபை ஊழியர்)

திதி: 06 — 11 — 1992

மகனே நீ மறைந்த மர்மமதை அறியாது
மனமேங்கித் துடிக்கின்றோம் - நீ மடிந்த
மூன்றாண்டுகளாய்
எந்த வழி மாயமிதோ மாற்றாரின் சதியிதுவோ
மாலையிலே வேலை சென்றாய் காலை தொங்கும்
பிணமானாய்!

மகனேயுன் மரணம் மர்மம் நிறைந்த தென
மனத்திலுறு ஐயமதை மனந்திறந்து சொன்னேன்
மக்கள் முன் பகிரங்க விசாரணை வேண்டுமென
மகன் - தந்தை பாசமுடன் மனங்கலங்கி நின்றேன்!

அமைதிப் படையென்ற அந்நியப் படையினரின்
ஆதரவில் நின்றிங்கே நிர்வாகம் நடத்திட்ட
அட்டகாசப் படையினர் அடக்கினர் என் வாயை
அக்கிரமப் போர்வையிலே அநியாயத் தீர்ப்பு!

தற்கொலையாம் நீ செய்தாய் தனயனே
உண்மையிதோ!

தர்மம் அழிந்தது அதர்மம் ஓங்கியது
தனித்திருந்து நாமிங்கே தயங்கித் தவிக்கின்றோம்
தகுந்த ஒரு நீதியனைக் காலந்தான் தரவேண்டும்!

பல்லாண்டு சென்றாலும் பதைபதைக்கக் கொன்ற
பாவியரை இனங்கண்டு வினை தீர்க்கும்
நல்வழிதான் பிறக்கும் நம் நெஞ்சம் ஆறாது!
நாமெல்லாம் கண்ணீரே அஞ்சலியாய் நல்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;
அன்புத் தாய், தந்தை, சகோதரங்கள்,
மருமகன்மார் தணிகாசலம், கிருபாகரன்.

கலட்டி,
கரவெட்டி. (23140)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 04 — 01 — 1906

சாயிபதம்: 01 — 11 — 1991



### திருமதி அன்னம்மா இரத்தினம்

திதி: 6-11 1992

இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"இரத்தினம் அவெனியூ"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (23154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சு. க.வின் கோரிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை வகுப்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை தமிழர் தரப்பில் முன்வைக்கப் படவில்லை பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. அநுரா பண்டாரநாயக்கா சென்னையில் வைத்து அளித்த பேட்டி ஒன்றின் போதும் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

இவற்றை நோக்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யதார்த்தத்தை ஓரளவாவது புரிந்திருக்கிறது என்றுகொள்ள வேண்டி உள்ளது. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் ஒரே மார்க்கம் என்ற உண்மை இப்போதாவது அதற்குப் புரிந்திருக்கிறது என்றும் கருதலாம். அதே வேளை அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுப்பதற்காக அதன் நிலைப்பாடு என்ன என்பதனைப் படம்பிடித்து வெளிக் கொணர்வதற்காகவும் எதிர்க் கட்சியான சுதந்திரக் கட்சி இப்படிப் புதிய வேடம் போடலாம் அல்லவா?

இலங்கையின் இனப்பிரச்சினை — தமிழர் பிரச்சினை — இந்தளவுக்கு முற்றி இரு தரப்புகளிலும் மக்கள் அழிந்து, பொருளாதாரம் சீர்கெட்டு, நாடு சிதைவுற்றுப் போனதற்கு — போவதற்கு ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி வீற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுமே காரணம்.

தமிழர் பிரச்சினை இந்த நாட்டின் தேசிய பிரச்சினை யாதலால் அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் அவை கரிசனை காட்டவில்லை.

இப்போது கூட, முப்பது மாத யுத்தத்தின் பின்னரும், தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்ப்பதில் உரிய கவனம் செலுத்தவில்லை. இரண்டு கட்சிகளுமே இதுவரை தமது சொந்தத் தீர்வுத் திட்டங்களை முன் வைக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போலவே, ஸ்ரீ. ல சு. கட்சியும் இராணுவத் தீர்வை ஆதரிக்கும் போக்கிலேயே பேசி வந்தது. இப்போது திடீரென "ஞானம்" பிறந்தது போலப் பேசுகிறது.

எவ்வாறாயினும் தமிழர் பிரச்சினையில் நேரில் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் — அவர்களை ஓரங்கட்டி விட்டு, சிங்களக் கட்சிகள் தனித்தோ அல்லது கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களுடன் பேசியோ பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் அமுல் செய்ய முடியாது.

அதனை வலியுறுத்தி உணர்த்துவதற்கேனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய போக்கு உதவும். இதனையும் அரசாங்கம் காதில் போடாமல் தான் நினைத்த வழியில் செல்ல முற்படுமானால் நாடு மேலும் பலப்பல ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடும். இனப்பிரச்சினை தீர்வில்லாத சிக்கலாகவே நீண்டு செல்லும்.

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய செயலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடத்தப்பட்டு வந்த சுகாதாரக் கருத்தரங்குகளின் மீளாய்வுத் தொடர் நடவடிக்கையின் செயற்பாடாக இக் கருத்தரங்கு அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-162)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 6

தமிழீழ மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு "சிந்து வெளி நாகரீகம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். விரிவுரையாளர் திரு. கிருஷ்ணராஜா கருத்துரை வழங்குவார். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 6

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில் தூய கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறும்.

கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்படுகின்ற இக் கருத்தரங்கு தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறும்.

தூய கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இக் கருத்தரங்கில் பங்கு பற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக் கருத்தரங்கின் தொடக்க விழாவில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், பேராசிரியர் வே. தருமரத்தினம் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொள்வார்கள். (இ)

## ஏனைய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேரருள் டி. ஜே. அம்பலவாணர் மற்றும் குருமார்கள், மாதநிலையினர், பிரஜைகள், பிரதிநிதிகள், கலந்து கொண்டு புதிய ஆயரை வரவேற்று பேசினர்.

வண. றெஜி இராசேந்திரன் நன்றி கூறினார்.

இந்த வைபவத்துக்கு முன்னர் ஆயர் இல்லத்தில் இருந்து மங்கள வாத்தியங்களுடன் குருமார்கள் அணியாகச் செல்ல ஓய்வுபெறும் ஆயருடன் அழைத்துச் செல்லப்பட்ட புதிய ஆயர் நூற்றுக்கணக்கான குருமார்களுடன் இணைந்து நன்றித் திருப்பலியை யாழ். பேராலயத்தில் ஒப்புக் கொடுத்தார்.

மங்கள வாத்தியங்களுடன் வெளிவாசலிற்கு அழைத்து வரப்பட்ட புதிய ஆயருக்கு திருமறைக் கலாமன்ற மாணவிகள் வரவேற்று நடனம் விருந்தளித்தனர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. [இ-51]

## பத்தமேனிக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் புத்தூர், நீர்வேலி, இருப்பிட்டி மற்றும் பல இடங்களில் தங்கியுள்ளனர்.

[இ-11-15-162-126-17-5]

# மருத்துவ பீடாதிபதியின் ராஜினாமா; வாபஸ் பெற மாணவர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், நவ 6

மருத்துவ பீடாதிபதி திரு. எஸ் பாலசுப்பிரமணியம் தமது இராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக மருத்துவ பீடத்தின், 1984 - 1985 ஆம் ஆண்டுப் பிரிவு மாணவர் பிரதிநிதியினாலும் 1985-1986 ஆண்டுப் பிரிவு மாணவர் பிரதிநிதியினாலும் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள் இடம்பெற்ற சில துரதிஷ்டமான நிகழ்வுகள் புலமைமிக்க எமது பீடாதிபதியின் ராஜினாமாவுக்கு வழிவகுத்தது கண்டு நாம் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

தற்போது நிலவும் கஷ்டங்கள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில் சலியாத உறுதியுடனும் உணர்வுடனும் வைத்திய மாணவர்களின் நலனுக்காக கடந்த காலத்திலும் தற்போதும் அவர் ஆற்றிய அளப்பெரும் சேவைகளை நாம் வெளிப்படையாக, மனந்திறந்து ஒப்புக்கொள்கின்றோம்.

பீடாதிபதியை வேதனைப் படுத்திய அந்தத் துரதிஷ்டவசமான நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கக்கூடாது என்பதே எமது உளப்பூர்வமான கருத்து.

பீடாதிபதி தமது ராஜினாமாவைச் சமர்ப்பிக்கக்கூடிய பாரதூரமான நிலைக்குச் செல்லாதவாறு, அந்த நிகழ்வுகள் ஏற்படுத்திய மனவேற்றுமைக்கு சிநேகமான முறையில் தீர்வு கண்டிருக்கவேண்டும்.

சிரேஷ்ட மாணவர்களுடன் புதிய மாணவர்கள் சேர்ந்து கொள்வது தொடர்பாக நல்லொழுக்கக் கோவை ஒன்றை வகுத்து அமுலுக்கு கொண்டுவராத நிலையால்தான் இந்தப் பிரச்சினை எழுந்தது.

சிரேஷ்ட மற்றும் புதிய மாணவர்களின் நன்மை கருதி பல்கலைக்கழக மாணவ ஆலோசனைக்குழுவும் பல்கலைக் கழக நிர்வாகமும் இணைந்து செயற்பட்டு நல்லொழுக்கக் கோவை ஒன்றை வகுக்க வேண்டும் என்று நாம் பலமாக அபிப்பிராயப்படுகின்றோம்.

அப்படியான ஒரு நடவடிக்கை பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் மாணவர் மத்தியில் பதற்றத்தைக் குறைப்பதற்கும், உகந்த சிநேகபூர்வமான சூழலைக் கொண்ட சந்ததி ஒன்றுக்கு வழி அமைக்கவும் உதவும் என நாம் நம்புகின்றோம்.

நாம் எம்மை ஒரு குடும்பமாக கருதுகின்றோம். சில நிகழ்வுகளால் ஏற்பட்ட மனவேற்றுமை இக் குடும்பத்தைச் சேர்ந்த எவரின் உணர்ச்சிகளையும் புண்படுத்தாதவாறு தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே எமது எண்ணம்.

அவர் பீடாதிபதியாக இருப்பது, எமது பீடம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உதவும் என்று நாம் நம்புகின்றோம்.

இச் சூழ்நிலையில், நடந்தவற்றுக்காக நாம் ஆழ்ந்த வேதனையும் விசனமும் அடைகின்றோம். மீண்டும் பீடாதிபதியாக பதவியேற்று முன்னர் போன்று திறமையுடனும், திடத்துடனும் தமது சேவைகளை தொடரும் படி அவரை நாம் மிகப் பணிவுடனும் விசேடமாகவும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இந்த வேண்டுகோள் எமது பீடம் மற்றும் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு மட்டுமல்லாமல் எமது சமூகத்துக்கும் நன்மை பயக்கும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## "ராகிங்" தேவையா என்று மாணவர் முடிவு செய்யட்டும்

### பேராசிரியர் விளக்கம்

"ராகிங்" தங்களுக்குத் தேவையா? இல்லையா? — என்பதை மருத்துவபீட மாணவர்கள் முடிவு செய்யட்டும்; அவர்களுக்கு 'ராகிங்' வேண்டாம் என்றால் நாம் 'ராகிங்' நடக்காமல் பார்த்துக்கொள்வோம். 'ராகிங்' தேவை என்று அவர்கள் முடிவு செய்தால் எமது சமுதாயத்துக்கும், எமது பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும், பல்கலைக்கழக மாணவ ஆலோசனைக்குழுவுக்கும் அறிவித்துவிட்டு அவர்கள் 'ராகிங்'கில் ஈடுபட அனுமதிப்போம்.

— இவ்வாறு கூறினார் மருத்துவபீட பேராசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம்.

மருத்துவ பீடாதிபதி பதவியை இராஜினாமாச் செய்திருக்கும் திரு பாலசுப்பிரமணியத்திடம், இராஜினாமாவை வாபஸ் பெறுமாறு கோரி மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இறுதியாண்டு மாணவர்கள் தமது அறிக்கையில், மருத்துவபீட மாணவர்கள் அனைவரும் ஒரு குடும்பம் என்று குறிப்பிட்டார்கள். ஆகவே குடும்பத்தவர்கள் அனைவரும் ஒன்று கூடி தங்களுக்கு 'ராகிங்' தேவையா என்று முடிவு செய்யட்டும். முடிவு செய்யாமல், இரண்டும் கெட்டான் நிலையில் ஒரு முன்னேற்றமும் காணமுடியாது.

ஒரு நோக்கத்துக்காகத்தான் நான் இராஜினாமாச் செய்திருக்கிறேன்; அந்த நோக்கம் எட்டப்படாமல் நான் இராஜினாமாவை வாபஸ் பெறுவது எப்படி?

மாணவர்கள் தமக்குத் தேவையானது என்ன என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்யட்டும். அதன் பின் நான் உரிய முடிவை எடுப்பேன். — இவ்வாறு பேராசிரியர் மேலும் கூறினார். [உ-5]

## பல்கலைக்கழக மாணவர்கள் சுழற்சி முறையில் இரத்ததானம்

யாழ்ப்பாணம், நவ 6

யாழ். போதனா வைத்திய சாலையில் ஏற்பட்ட இரத்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உதவும் பொருட்டு யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இரத்ததானம் செய்ய முன்வந்துள்ளனர். இவர்கள் சுழற்சி முறையில் இரத்ததானம் செய்வர்.

பல்கலைக் கழக மாணவர்களில் முதல் அணியினர் நேற்று வைத்தியசாலை இரத்த வங்கியில் வைத்து இரத்ததானம் செய்தனர்.

இதேவேளை — இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிவித்தும் பொதுமக்கள் இரத்ததானம் செய்ய முன்வரவில்லை என்று இரத்த வங்கியின் பொறுப்பாளர் டாக்டர் ரஞ்சி இராஜரசஜேஸ்வரன் கவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நிறுவனங்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள், சமூக சேவை நிலைய உறுப்பினர்கள் ஆகியோர் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். [அ-17]

மன்னாரில்

## 30 மைல் நீள ராணுவ வேலி அமைக்கும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், நவ. 6

"30 மைல் நீளமான இராணுவ வேலி ஒன்றை மன்னாரில் அமைக்க இராணுவத்தினர் எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களையடுத்து தோல்வியடைந்தது."

மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. ஜோன் புலிகளின் குரல்வானொலிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது...

விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு புதிய யுத்த தந்திரோபாயங்களை பிரயோகித்து இராணுவத்தின் இராணுவ வேலி அமைக்கும் திட்டத்தை முறியடித்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கையின் மூலம் ஆரம்பத்தில் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மாந்தை, அடம்பன், ஆட்காட்டி வெளி, வட்டக்கண்டல், 11 ஆம் கட்டை முருங்கன், கட்டுக்கரை குளம் வரையான இடங்களை ஆக்கிரமித்தனர். பின்னர் அந்தப் பகுதிகளில் 30 மைல் நீளமான இராணுவ வேலியை அமைக்கத் திட்டமிட்டனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் அத்திட்டம் தோல்வி கண்டது.

நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்று தற்சமயம் 8 மைல் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில் நிலை கொண்டுள்ளனர்.

இப்படி அவர் கூறினார். (இ-5)

## இருவர் காயம்

கடந்த புதன்கிழமை இரவு 9.00 மணியளவில் வீடு ஒன்றின் மீது இடி வீழ்ந்ததில் உணவு அருந்திக் கொண்டிருந்த இரண்டு பெண்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

கைதடி மறவன் புலோவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவலிங்கம் மகேஸ்வரி (வயது 32), அம்பலவாணர் சிவஞானசோதி (வயது 50) ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி முருகேசு

வற்றாப்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகேசு 03 - 11 - 1992 இல் காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குகதாசன் (அதிபர் - முள்ளைத்தீவு, இந்து வித்தியாலயம்), தனபாலசிங்கம், நடராஜா, சுப்பிரமணியம் (முன்னாள் "பாரதி பதிப்பக" உரிமையாளர் - முல்லைத்தீவு), யோகராணி, தனராணி, விவேகானந்தன் (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையாரும், ருக்குமணி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, சாமினிலக்சுமி, நவரட்ணம், சிவயோகநாதன், சாந்தலக்சுமி ஆகியோரின் மாமனாரும், மைதிலி, மயூரன், மயூரதி, தனஞ்செயன், தர்ஷினி, சதீஸ்குமார், சசிகரன், பிரசாந்தி, விஜயந்தி, றோஷனா, வெனிக்கா, பகீஸ்கரன், குபேஸ்கரன், சதீஸ்கரன், றொசான், மௌவிகா, கௌசிகா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 11 - 1992 புதன் காலை 8-00 மணிக்கு வற்றாப்பளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
மு. விவேகானந்தன்.
(மகன்)

15, மூத்தவிநாயகர் -
1ஆம் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி நல்லூர்

[23155]

## திருமதி பாலலோஜனாம்பாள் முத்துக்குமாரு

சரவணை மேற்கைச் சேர்ந்த திருமதி பாலலோஜனாம்பாள் முத்துக்குமாரு 01-11-1992 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் வைத்திலிங்கம் முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் பிரதீஸ்குமார், பிரம்ம வித்தியா [கவிதா] [ஆயுள் வேத வைத்தியர்], வத்சல்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நாகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், சீதேவிப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காமாட்சியம்மா, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற கையிலாயபிள்ளை, பரமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கமலலோஜனாம்பாள் (ஆசிரியை), அருண்மொழித்தேவர், ஞானப்பூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நீர்கொழும்பில் 02-11-1992 திங்கட்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வை. முத்துக்குமாரு குடும்பத்தினர்.
ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.

[23156]

## அ. சிறிசக்கரமென்தாஸ் [இலங்கேந்திரன்]

அரியாலை முள்ளிவீதியைச் சேர்ந்த அ. சிறிசக்கரமென்தாஸ் 03- 11- 1992 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார். இவர் திருமதி மேரி யோசேப்பின் [நவம்] என்பவரின் ஏகபுத்திரனும், தேவியின் [ஜேர்மனி] அன்புக் கணவரும், பற்றிக் [ஜேர்மனி], யூட் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. திருமதி சவரிமுத்து (Akkasons) அவர்களின் அன்பு மருமகனும், பெனடிக்ற் (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், K. K. S), விஜி [கிறின்ரோப்பரி, உரிமையாளர் சத்தியா பேக்கறி], சுரேஸ்குமார் [கனடா], சந்திரகுமார் [கனடா], திருமதி றஞ்சனி இராஜேந்திரன் [ஜேர்மனி], றஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. திருமதி மரியாம்பிள்ளை [மெக்கானிக்] ஆகியோரின் அன்புப் பேரனும், மகிழநாயகம் [கனடா], மதுரநாயகம் [கனடா] ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

தகவல்:
சவரிமுத்து பெனடிக்ற்

82/5, பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

[23164]

## சங்கரன் சபாரத்தினம்

(பிரபல வர்த்தகர் - கைதடிச் சந்தி)

கைதடிச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரன் சபாரத்தினம் அவர்கள் 04-11-1992 புதன் கிழமை இரவு 10 மணிக்கு காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஸ்ரீகெளரியின் அன்புக் கணவரும், இந்திராணி, இந்திரராசா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இரத்தினம் (பிரபல ரான்ஸ்போட் சேவையாளர்), விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாந்திராஸ், நிஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05-11-92) வியாழக் கிழமை பிற்பகல் 5-50 மணியளவில் கைதடி ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இறுதிக் கிரியை வைபவத்தில் வந்து கொண்டு மலர் வளையம் மற்றும் வேறு உதவிகள் புரிந்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது நன்றியை கூறிக்கொள்கின்றோம்.

தகவல்:
மா. இரத்தினம்
(மருமகன்)

கைதடிச் சந்தி,
(23165)

# முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 6

பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

காலையில் இயல் அரங்கும், முற்பகலில் இசையரங்கும், நண்பகல் முதல் மாலை வரை பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறும். இயல் அரங்கில் பண்டிதர் க. சச்சிதானந்தனும், இசை அரங்கில் விரிவுரையாளர் பொன். தெய்வேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

பரிசளிப்பு நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும் கலந்துகொள்வர். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (அ)

## 'பண் இசைத்தேன்'

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை "பண் இசைத்தேன்" என்ற நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

கல்லூரியின் பக்திச்சூழலை மேம்படுத்தவும் ஏனைய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களின் பண்ணிசை ஆற்றலை இக்கல்லூரி மாணவர்கள் நேரிற் கண்டு பாராட்டவும் அதன் மூலம் தமது திறமையை மேலும் வளர்க்க வேண்டும் என்ற உந்துதலைப் பெறவும் உதவும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ)

## மரம் நடுகையும் சிரமதானமும்

கடந்த திங்கட்கிழமையன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் சிரமதானமும் மரக்கன்றுகளின் நடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

மாவீரர் துயிலும் இல்ல வேலி ஓரங்களில் வேம்பு மரக்கன்றுகளும் இராஜ வீதியின் இருபுறமும் சவுக்கு மரக்கன்றுகளும் இந்த வைபவத்தின் போது நாட்டப்பட்டன.

## மீட்பு நிதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோப்பாய் உ. அ. அ பிரிவு மக்களிடம் இருந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 3.15 மணி தொடக்கம் 4 மணி வரை அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும், 4.15 மணி தொடக்கம் 5 மணி வரை உரும்பராய் இந்துக் கல்லூரியிலும் மீட்பு நிதி சேகரிக்கப்படும் என்று நிதிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## படையினருக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மீது அரசாங்கத்துக்கு பூரண நம்பிக்கை உண்டு. அவர்கள் தமது பணியைச் செய்துமுடிப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார்.

கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவற்றுக்கான சட்டங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 12 பிரமாணங்களுக்கு அங்கீகாரம் பெறுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே பிரதமர் இத்தகவல்களை வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் [illegible] நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

# கிளிநொச்சியில் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களின் நன்மை கருதி, பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா வகுப்புகள் அண்மையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மட்டும் முன்னர் நடத்தப்பட்டு வந்த இப் பயிற்சி நெறிகள் தற்போது நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் 33 பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப் பயிற்சி நெறியில் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் —

பயிற்சியில் சேர விரும்புபவர்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## "ராகிங்"...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூறப்படும் ராகிங் சம்பவத்தின் போது மேற்படி மாணவரும் பிரசன்னமாகியிருந்தார் என்றும் —

அச்சம்பவம் பற்றிய விசாரணையின் போது, "ராகிங்" பற்றிய விவரங்களை வெளியிட மறுத்த குற்றத்துக்காக அவரை இடைநிறுத்தி வைக்க நிர்வாகம் முடிவு செய்ததாகவும் மருத்துவபீட உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# உடன் கவனத்திற்கு

## செல்வி சாரங்கா குலராஜசிங்கம்
## குடத்தனை, பருத்தித்துறை

சாமி அன் கம்பனியில் 05-11-92 இல் செய்த இரத்தப் பரிசோதனையில் மூளை மலேரியா கிருமிகள் இருப்பதால் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கவும்.

டாக்டர் ஜெபநாமகணேஷன்
உசன், மிருசுவில்.

(23163)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## பத்மநாதன் - பத்மராஜன் (கண்ணன்)

(வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவன்
நியூ சாரதா ரேட் சென்ரர், கொழும்பு - 11)

| வையத்துள் | தெய்வத்துள் |
|---|---|
| 3 — 12 — 1969 | 8 — 10 — 1992 |

எங்கள்குல விளக்கினோர் கண்ணன் - என்றும்
எமதுயிர் வளர்பத்ம ராஜன்
பொங்கும் பேரெழில் பண்பாளன் - துயர்
போக்கிட எங்களைக் காத்தோன்
சீருடன் சோதரர் வாழ — கொழும்
பூர்தனில் செய்தொழில் தாங்கி
பேருடன் புகழுடன் வாழ்ந்தான் — எம
காலனும் கவர்ந்துமை போந்தான்
நெஞ்சம் மறக்குமோ உன்னை - எங்கள்
நினைவு மன்றங்களில் எல்லாம்
தஞ்சம் நீதானே கண்ணா - எங்கள்
சாவிலும் மறந்திட எண்ணோம்.

உன் பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், அக்கா, தம்பிமார்கள்,
அத்தான், மருமகன், உறவினர்,
நண்பர்கள், மற்றும்
"நியூ சாரதா ரேட் சென்றர்"
உரிமையாளர், குடும்பத்தினர்,
ஊழியர்கள்.

687/28A, மானிப்பாய் வீதி,
ஒட்டு மடம்,
யாழ்ப்பாணம்.

[சி-3669]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org